**செய்தி வெளியீடு எண் : 909** **நாள்: 05.06.2022**

## <u>செய்தி வெளியீடு</u>

# உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. கேஆர். பெரியகருப்பன் அவர்கள் உழவர் உற்பத்தியாளர் குழுக்களுக்கு பசுமை விருதுகள், பசுமை உற்பத்திப் பொருட்கள் ஊக்குவிப்பு மானியம் ஆகியவற்றை வழங்கி சிறப்பித்தார்.

.....................................

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில் சிறப்பாக செயல்பட்டு வரும் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் சார்பில் உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு உழவர் உற்பத்தியாளர் குழுக்களுக்கு பசுமை விருதுகள் மற்றும் பசுமை உற்பத்திப் பொருட்கள் ஊக்குவிப்பு மானியம் ஆகியவை வழங்கும் விழா, பயிலரங்கம் மற்றும் உழவர் உற்பத்தியாளர் குழுக்களின் தயாரிப்பு பொருட்கள் கண்காட்சி ஆகியவை இன்று (05.06.2022) சென்னையில் நடைபெற்றது.

உலக வங்கி நிதி உதவியுடன் செயல்பட்டு வரும் வாழ்ந்து காட்டுவோம் திட்டமானது, தமிழகத்தின் 31 மாவட்டங்களில், 120 ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட 3,994 கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தில் சுய உதவிக் குழுப் பெண்கள், அவர்களின் குடும்ப உறுப்பினர்கள், ஆதிதிராவிடர், பழங்குடியினர், மாற்றுத் திறனாளிகள், இளைஞர்கள் மற்றும் ஆர்வமுள்ள தொழில் முனைவோர்கள் பயனாளிகள் ஆவர். இத்திட்டத்தின் கீழ் 6,000 நுண் நிறுவனங்கள், 500 குறு நிறுவனங்கள், 120 சிறு நிறுவனங்கள் கண்டறியப்பட்டு அவற்றிற்குத் தேவையான தொழில் நுட்பப் பயிற்சிகளை வழங்குதல், நிதி சேவைகளுக்கு வழிவகுத்தல், இணை மானியம் மற்றும் வேலை வாய்ப்புகளை உருவாக்குகிறது.

மேலும், உற்பத்தியாளர்களை குழுவாக ஒன்றிணைத்து உற்பத்தி திறனை அதிகரிக்கவும், விளைப் பொருட்களை திரட்டவும், இதர கூட்டு நடவடிக்கைகளுக்காக ஒன்றிணைந்து உற்பத்தியாளர்களின் வருமானம் மற்றும் இலாபத்தை அதிகரிக்கவும் உற்பத்தியாளர் குழுக்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

உற்பத்தியாளர் குழுக்களை ஒருங்கிணைத்து, அவர்களின் பொருட்களுக்கான மதிப்பு கூட்டல், சந்தைப்படுத்துதல் மற்றும் அவர்களின் பொருளாதாரத்தை அதிகப்படுத்துவதற்கான சேவைகளை வழங்க உற்பத்தியாளர் கூட்டமைப்புகள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கு நாம் இயற்கை விவசாய முறைகளைக் கையாளுதல் போன்றவற்றை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும். இதைக் கருத்தில் கொண்டு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் குறித்த விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

மேலும், வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் 40,000 உற்பத்தியாளர்களை உள்ளடக்கிய 50 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் உருவாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றில் 80 விழுக்காடு உறுப்பினர்கள் பெண்கள் ஆவர். 50 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களில், 28 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. தற்போது 25 நிறுவனங்களுக்கு தரப்படுத்தல் பயிற்சி தர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உற்பத்தியாளர் கூட்டமைப்புகளுக்கான சேவை வழங்குவதற்காக, உற்பத்தியாளர் கூட்டமைப்புகளுக்கான தர ஆய்வு செய்யப்படுகின்றது. இதன் மூலம் உற்பத்தியாளர் கூட்டமைப்புகளின் பலம் மற்றும் இடைவெளிகளைச் கண்டறிந்து அதற்கேற்ற செயல்பாடுகள் மேற்கொள்ளப்படுவதற்கு உதவுகிறது. தர ஆய்வில் சுமார் 80 சதவீதம் உற்பத்தியாளர் கூட்டமைப்புகள் "A" மற்றும் "B" தர மதிப்புப் பெற்றுள்ளன. இந்தத் தர ஆய்வு ஒட்டு மொத்த நிதி மற்றும் நிறுவன திறன்களை ஆய்வு செய்ததோடு மட்டுமல்லாமல் "பசுமை செயல்பாடுகளையும்" தர

ஆய்வு செய்யப்பட்டது. வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தில் முதன் முறையாக மற்றும் புதுமையாக "பசுமை" வகை ஆய்வையும் தர ஆய்வில் இணைத்துள்ளது. இந்த ஆய்வில் முக்கிய அம்சமாக தேசிய வள மேலாண்மை (NRM) சார்ந்த தேவைகளான வறட்சியைத் தாங்கி வளரக் கூடிய பயிர்கள் மற்றும் வகைகள், கரிம மற்றும் உயிரி இடுபொருள்கள், நீர் பாதுகாப்பு மற்றும் மறுசுழற்சி, கழிவு மேலாண்டை புதுப்பிக்கக்கூடிய ஆற்றலைப் பயன்படுத்துதல் போன்றவையும் ஆய்வில் சேர்க்கப்பட்டன. மேற்கூறிய அனைத்துக் அம்சங்களையும் தேவைகளையும் கொண்டுள்ள மற்றும் பருவநிலை எப்மார்ட், நீடித்து நிலைக்கக்கூடிய பொருட்களை உற்பத்தி செய்யும் நடவடிக்கைககள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு ஏற்கனவே செயல்பட்டு வரும் 22 உற்பத்தியாளர் கூட்டமைப்புகள் "பசுமை உற்பத்தியாளர் கூட்டமைப்புகளாக" கண்டறியப்பட்டுள்ளது. 22 உற்பத்தியாளர் கூட்டமைப்புக்கு பசுமை விருதுகளையும், 16 நிறுவனங்களுக்கு பசுமை விருது மற்றும் பசுமை உற்பத்திப் பொருட்கா ஊக்குவிப்பு மானியமாக ரூ.1.50 – 2.50 இலட்சமும் மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களால் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டது.

முன்னதாக, உலக வங்கியின் ஆதரவில் உள்ள மற்ற நிறுவனங்களின் சிறந்த நடைமுறைகள் பற்றிய வெளிப்பாடு மற்றும் விழிப்புணர்வைப் பெறவும், அவர்களின் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்காகவும் உழவர் உற்பத்தியாளர் அமைப்புக்களுக்கான பயிலரங்கம் நடைபெற்றது.

மேலும், விழா நடைபெறும் வளாகத்தில் உழவர் உற்பத்தியாளர் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களின் கண்காட்சி வைக்கப்பட்டிருக்கிறது. இந்த நிகழ்ச்சியில் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. சுப்ரியா சாஹு, இ.ஆ.ப., அவர்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் திருமதி. பெ.அமுதா, இ.ஆ.ப., அவர்கள், வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் தலைமை செயல் அலுவலர் திருமதி. ம. பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள், முதன்மை செயலாக்க அலுவலர் திருமதி. எம். அருணா, இ.ஆ.ப., அவர்கள், உலக வங்கி அணித்தலைவர்

திரு. சமிக் சுந்தர் தாஸ் அவர்கள், மண் உயிரியலாளர் மற்றும் சூழலியலாளர் டாக்டர். சுல்தான் அகமது இஸ்மாயில் அவர்கள், வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் கூடுதல் இயக்குநர் திரு. அருள்ஜோதி அரசன் அவர்கள், தமிழ்நாடு, ஜார்கண்ட், மகாராஷ்ட்டிரா மற்றும் மத்தியபிரதேசம் ஆகிய மாநிலங்களில் செயல்படும் வேளாண் உற்பத்தியாளர் நிறுவங்களின் பிரதிநிதிகள் மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

*******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in